விலை சதம் 10

# காந்தீயம்

அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்தின் திங்கள் வெளியீடு

Registered at the G. P. O. as a Newspaper in Ceylon

**அறிவிப்பு**

காந்தி நூற்றாண்டு விழாவை முன்னிட்டு கிராமங்களிலும் நகரங்களிலும் சேவை செய்வதற்கு ஊழியர்கள் தேவை. விபரங்களுக்கு

காந்தி நிலையம்
உருத்திரபுரம்

மலர் 7 | காந்தி நிலையம் - உருத்திரபுரம் (காந்தி ஆண்டு 100) 1970 ஜனவரி | இதழ் 4



## இனி என்ன?

அறிவு, மிக்க வளம் பெற்று விண்ணிலேறி சந்திரனைத் தொட்டு நின்றாலும், மண்ணிலே விண்ணைக் காணும் நெறியைக் காட்டியவர் காந்தியண்ணல், வாழ்க்கை வேறு, அரசியல் வேறு, அறங்கள் வேறு என்னும் எண்ணத்தை மாற்றி, மூன்றையும் ஒன்றாக்கிச் சர்வோதய வழிகாட்டியவர் அவர். இன்று உலகுக்கு வேண்டியது சத்தியப் போர்; அந்தப் போர்க் கருவி அகிம்சை, பகைமைப் போரும் கொலைக் கருவிகளும் இனிச் செல்லுபடியாகா என்னும் புதுக் கொள்கை வகுத்தவர் அவர் அதனால்,

உலகப் போக்கினை உண்மையாக உணர்ந்தவர்கள் நாம் வாழும் காலத்தை விண்வெளியுகம்; என்று கூறுவதிலும் பார்க்க, காந்தியுகம் என்று கூறுவதிற் பெருமை கொள்வர்.

அந்தப் பெருந் தகையின் நூற்றாண்டுவிழா அகில உலகெங்கும் சிறப்புற நிகழ்ந்தது; நாமும் கொண்டாடினோம்.

இனி,

அந்தச் சத்தியப் போரை, அகிம்சை நெறியை, வாழ்க்கை முறையை -இவற்றையுள்ளடக்கிய சர்வோதய நெறியை அருமையானதொரு கனவாகக் கருதாது நனவாக்கச் செயலிலீடு படுவதையே உலகம் எதிர்பார்க்கிறது.

காந்தீயம்

உருத்திரபுரம், (இலங்கை)
தொலை பேசி: 254
கிளிநொச்சி.
காந்தி ஆண்டு 100
1970 ஜனவரி

## சர்வோதயப் பாத்திரம்

சர்வோதய இயக்கத்தில் வீடுகள் தோறும் பாத்திரங்கள் வைத்துப் பிடி அரிசி எடுக்கப்படுகிறது. மற்றையவர்க்கு உதவுவதற்காகப் பாத்திரத்தில் அரிசியும் காசும் போடப்படுகின்றன. பின்னர் அரிசியும் காசும் அவற்றை மிகவும் தேவைப்படுபவர்க்குக் கொடுக்கப்படுகின்றன. இந்தப் பாத்திரம் பற்றிய கருத்து புனிதமானது. இதனினும் முக்கியமான பாத்திரமொன்றுள்ளது. அது தான் நம் உடல். உடல் என்கின்ற பொழுது அது வெறும் உடலைக்குறிக்கவில்லை. உடலோடு சேர்ந்த மனம், வாக்கு எல்லாம் இதில் அடங்கும்.

பாத்திரத்திற்கு இன்னுமொரு பொருளுண்டு. கதைகளில், நாடகங்ளில் வரும் ஆட்களையும் நாம் பாத்திரங்கள் என்கிறோம். மனிதர்களும் உண்மையில் நாடகபாத்திரங்களே. ''நாடகத்தால் உன்னடியார் போல்நடித்து நான் நடுவே வீடகத்தே புகுந்திடுவான் மிகப்பெரிதும் விரைகின்றேன்'' என்று மாணிக்கவாசகர் கூறுகின்றார். அவர் ஈசனையடைவதற்கு நாடகம் நடித்ததாகக் கூறுகின்றார். நாடகம் என்பது இங்கு பொய் வேடம். நாம் வாழ்வில் செய்வதென்ன? சகலதுறைகளிலுமே நாடகம் நடிக்கின்றோம். எம் உண்மையான அந்தரங்க இயல்பை மறைத்து வெளியில் நல்லவர்போல் வேடம் போடுகின்றோம். இதை நாம், கல்வியறிவாலும் கடவுள் வழி பாடாலும் செய்கிறோம். நாளடைவில் இந்தநடிப்புக்குணம் மறைந்து இயல்பாகவே நம்மில் நல்ல குணங்கள் குடிகொள்ளத் தொடங்கிவிடுகின்றன. இவ்வழியால் நாம் நாடக பாத்திரநிலைமையிலிருந்தும் மாறி உண்மையில் நல்ல குணங்களுக்கு உறைவிடமான ஒரு பாத்திரம் என்பது இங்கே நாம் மேற்கூறிய முதலாவது கருத்தைப் பெறுகின்றது.

பாரதியார் ''சக்திக்குச் சமர்ப்பணம்'' என்ற பாடலில் இந்த உடல்பற்றிப் பாடியுள்ளார். இங்கு பாரதியார் உடலோடு புத்தியையும் சக்திக்குக் கருவியாக்கச் சொல்லுகின்றார். நாம் நம்மைச்சக்தியென்று சொல்லப்படும் பரம் பொருளுக்குக் கருவியாக்க வேண்டுவதில்லை. மனித குலத்திற்கே கருவியாக்கலாம்.

இவ்வாறு நம் உடலையே சர்வோதய பாத்திரமாக்கி விட்டால் அதனினும் சிறந்த தவ வாழ்வு வேறொன்றில்லை.

உலகில் நல்லனவற்றையெல்லாம் தேடி எடுத்து நம்முள் நாம் வைத்துக் கொள்ள வேண்டும்.

மற்றையவர்க்குப் பயன் படு வனவற்றைஅளிப்பதற்காகவே நாம் இதைச் செய்தல் வேண்டும் நல்லன வற்றைச் செய்வதற்கு ஏற்ற கருவியாகவே இந்த உடலை நாம் பேணவேண்டும். நல்லன வென்கின்றபொழுது, இந்த உடலோடு சேர்ந்து மனம், சொல், செய்கை எல்லாம் அடங்கும், நல்லன சிந்தித்தல் வேண்டும். மற்றையவர் உயர்வை நாம் சிந்தித்தல் வேண்டும். அவருடைய வளத்தை நாம் சிந்தித்தல் வேண்டும். என்றும் எம் நாவில் நல்லனவே நடமாடவேண்டும். பிறர் தீமை பேசாதிருத்தல் வேண்டும்.

அவ்வளவோடு நில்லாமல் இந்த உடல் தன்னையும் பேணி பிறர் நலத்திற்கும் உழைக்க வேண்டும். இதற்கு நாம் என்ன செய்யவேண்டும்? நல்லோரோடு உறவு கொள்ளவேண்டும். பெரியோர் மொழிகளை உளம் கொள்ளல் வேண்டும். உளம் கொள்ளுவதோடு அமையாது அவற்றிற்கிணங்க நடக்க வேண்டும். மற்றையவர் நலம் என்ற ஒரு கொள்கையே மனத்தில், உடலில் நிரம்பி வழிய வேண்டும். பிறர்நலம் பெரிதாகத்தோன்றும் ஒருவனிடத்து அவனுக்குரிய நலம் தானாகவே அமையும்.

## வரவு செலவு

அகில இலங்கைக்காந்தி சேவா சங்க கொழுப்புத்கிளை, சர்வோதய நிகேதனம் [1970 ஜனவரி மாதம்] வரவு—செலவு விபரம்.


| வரவு | ரூபா | சதம் |
|---|---|---|
| சர்வோதய பாத்திரம் | 21 | 95 |
| சம்பத்துத்தானம் | 98 | 90 |
| காந்தீயம் | 15 | 00 |
| அரிசி | 49 | 10 |
| விடுதிக்கட்டணம் | 130 | 85 |
| மொத்தம் | 315 | 80 |

| செலவு | ரூபா | சதம் |
|---|---|---|
| உணவு | 63 | 95 |
| பிரயாணம் | 22 | 05 |
| தபால் | 16 | 21 |
| சலவை | 4 | 39 |
| சவுர்கான் | 1 | 65 |
| மாண வர்செலவு | 14 | 06 |
| வெளிச்சம் | 3 | 00 |
| கட்டடம் | 2 | 00 |
| அச்சகம் | 11 | 75 |
| கைச்செலவு-சம்பளம் | 5 | 00 |
| காந்தீயம் | 27 | 00 |
| நாணுவிதம் | 3 | 65 |
| ஏற்ற-இறக்க | 1 | 50 |
| வயித்தியம் | | 15 |
| கமம் | 2 | 00 |
| மொத்தம் | 178 | 36 |

இதை எண்ணித்தான் நம்முன்னோர் இந்த உலகம் தமக்கென வாழாது பிறர்க்கென வாழ்பவர் இருப்பதால்தான் நடைபெறுகிறதுஎன்றனர். மகாத்மா காந்தியடிகளும்இவ்வாறு எண்ணியே, சிலர் தியாகத்தால் பலர் வாழ்கின்றனர் என்றார் நல்லார் ஒருவர் உளரேல் அவர் பொருட்டு எல்லார்க்கும் பெய்யும் மழை.

வீடுதோறும் வைக்கப்படும் சர்வோதய பாத்திரத்தை நாம் சிந்தித்துப் பார்ப்போம். ஏன் நாம் அதைப் போல் ஒரு நல்ல பாத்திரமாகக் கூடாது? நம்மையே நல்ல தொரு பாத்திரமாக்கி விட்டால், சர்வோதயத்திற்கு அது ஒரு மகத்தான தொண்டாகும்.

இ. இரத்தினம்.



# மகாத்மாவின் உள்ளம்

★ நீண்ட காலமாக வழிபாட்டு ஒழுக்க நெறியைப் பேணி என் நெஞ்சில் யார் மாட்டும் சினமோ பகையோ தோன்றா ஒரு நிலையை நான்பெற்றேன்; நாற்பது ஆண்டுக் காலமாக நான் இந் நிலையைப்பேணி வந்துள்ளேன். இது ஒரு பெரும் புகழ்ப் பேச்சு என்பதை நான் உணர்கிறேன். ஆயினும் மிகப் பணிவுடன் தான் இதைக் கூறுகிறேன். எனினும் தீமை எங்கிருப்பினும் நான் அதை வெறுப்பேன்; வெறுக்கிறேன்.

★ குற்றத்தை ஒப்புக்கொள்ளல், மாசினை அகற்றி மேல் பரப்பினைத் தூயதாக்கும் ஒரு விளக்குமாறாகும்.

★ தோல்வி என் நெஞ்சினைக் குன்றச் செய்யாது. அது என் மாசறுக்கும்.இறைவன் என்னை வழித்துணைஎன்பதை நானறிவேன். மனிதனின் ஞானத்திலும் விழுமியது உண்மை.

★ கருத்துவேற்றுமை என்பது பகைமையென ஒரு பொழுதும் பொருள்படாது. அவ்வாறாயின்நானும் என் மனைவியுமே என்றும் மாறாப் பகைவரா யமைந்திருப்போம். கருத்து வேற்றுமை இல்லா இரு மனிதரை இவ்வுலகில்நான் ஒரு பொழுதும் கண்டதில்லை.

★ தன் உணவைத் தானே தேடுமாறு ஈசன் இங்கு மனிதனைப் படைத்தனன்' வேலையின்றி உண்பவர்கள் கள்வரே.

★ நகைச்சுவை என்னிடம் இல்லாதிருந்தால் என்றோநான் இறந்திருப்பேன்.

★ ''சினங்காக்க'' என்னும் தலையாய ஓர் உண்மையைக் கசப்பான என் அனுபவத்திலிருந்து நான் கற்றேன். காக்கப்பட்ட வெப்பம் சக்தியாக மாறுதல் போல் கட்டுப்படும் எங்கள் சினம் உலகத்தை ஊக்கும் ஓர் ஆற்றலாக மாறும்.

★ அன்பு என்றும் உரிமை கோருவதில்லை; என்றும் அது அளிசெய்வது. அன்பு என்றும் துன்பம் தாங்குவது, ஒரு காலும் சினப்பதில்லை, பழி எண்ணுவதில்லை.

★ உங்கள் உள்ளத்தில் மாசை அகற்றுங்கள்; அறத்தைக் குடியேற்றுங்கள் உள்ளத்தைக் கடலளவு அகன்றதாக்குங்கள். மற்றையவரை மதிப்பிடாதீர்கள்; உங்களையும் மற்றையோர் மதிப்பிடலாம்.

★ நான் அறிந்தவரையில் என் பொது வாழ்விலும் என் தனிவாழ்விலும் நான் சத்தியம் தவறியதில்லை. பழி வாங்கும் கொள்கை ஒரு பொழுதும் பலன்தந்ததில்லை;

★ சொல்லரியமறைவானஒருசக்தியாவற்றிலும் ஊடுருவி நிற்கின்றது. நான் அதைக் கண்டிலேன் ஆயினும் உணர்கிறேன் காணரிய இச்சக்தியே தன்னைத் தான் உணர வைக்கின்றது; எனினும் இதுஎவ்வகையினும் நிறுவ ஒண்ணாதது. ஏனெனில் என் புலன் கொண்டு அறிபவையாவினும் இது வேறாயது.

★ நண்பர்கள் உங்களுடன் இசைந்து வரா நாட்களிலும் நீங்கள் கட்டாயம் துணிந்து வினை செய்ய வேண்டிய தருணங்கள் உங்கள் வாழ்நாளில் பலவரும். கடமையில்முரண்பாடுதோன்றுங்கால் உங்களுள் அமைந்த மோன உள்ளொளியே என்றும் முடிவான தீர்ப்பளிக்கட்டும்.

★ மனிதவாழ்வு என்பது இணக்க அமைவுப்பாடுகளின் ஒருநீள்வரிசையே. கொள்கையில் உண்மையெனக் கண்டதைச் செயலில் எய்தப் பெறுதல் என்றும் எவர்க்கும் இலகுவன்று.

நன்றி- வானொலி மஞ்சரி


**இளைஞர்களே !**

**உங்களுக்குத் தொழில் இல்லையென கவலை ஏன் ?**

★ கமம்
★ நெசவு
★ தும்பு
★ அச்சு
★ தையல்
★ மர வேலை

ஆகிய துறைகளில் இலவசப் பயிற்சி அளிக்கிறோம்.

விபரங்களுக்கு:-

காந்தி நிலையம்
உருத்திரபுரம் (தபால்)
அல்லது
சர்வோதய நிகேதனம்
இந்துக் கல்லூரிச் சதுக்கம்,
இரத்மலானை.

# நல்லவர்களுக் கோர் அழைப்பு

இன்று தேசத்தை எதிர் நோக்கி நிற்கும் நெருக்கடியான நிலைமைகளைப் பற்றி நாமனைவரும் மிகத்தீவிரமாகச் சிந்திக்க வேண்டியது மிக அவசியம்.

சுதந்திரத்தின் முக்கியமான நோக்கமே வறுமையையும், அநீதியையும், சுரண்டலையும் ஒளிப்பதுதான். ஆனால் இந்த அடிப்படையில் பிரச்னைகள் முன்பு இருந்தது போலவே இப்பொழுதும் இருக்கின்றன. சுதந்திரமடைந்து இருபத்து இரண்டு ஆண்டுகளில் ஏராளமான புதுப்பிரச்னைகளும் கிளம்பி பழைய பிரச்னைகளுடன் சேர்ந்துள்ளன. நம்மைச் சுற்றிலும் வன் முறை சக்திகளும் துவேஷமும் ஓங்கி நிற்கின்றன.

மொழி, மதம், ஜாதி ஆகியவற்றின் பெயரால் குறுகிய மனப்பான்மைக்கு தேசத்தின் மொத்த நலன் பலியாக்கப் பட்டு விட்டது. துரதிருஷ்ட வசமாக அரசியல் கட்சிகள் இந்த நிலைமைகளை மேலும் தூண்டி விட்டு இவ்வுணர்ச்சிகளை தங்களுக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொள்ளுகிறார்கள்.

சமீபத்தில் நடைபெற்ற மதக்கலவரங்கள் நிலமையை இன்னும் அதிக மோசமாக்கி விட்டன.

மதத்தின் பெயரால் வேற்றுமையை வளர்ப்பது மதத்தின் முக்கிய நோக்கத்தையே கெடுக்கிறது என்பதை எல்லோரும் உணர வேண்டும். மதம் என்பது மக்களை ஒருங்கிணைப்பதற்கே யொழிய மக்களைப் பிரித்து வைப்பதற்கல்ல. மதம் மனித சமுதாயத்தின் நலனுக்காகவே ஏற்பட்டது. இதற்கு மாறாக மதச் சண்டைகள் தேசத்தின் முன்னேற்றத்தைத் தடுத்து பிரிவினை போக்குகளை வளர்க்கின்றன. இந்த தேசத்தை நாசப் பாதையில் தள்ளி விடுகின்றன. இந்த தேசத்தை உள்ளேயே அரித்து பல வீனமாக்குவதோடு மற்ற நாடுகளுடன் உள்ள தொடர்பு களையும் பாழாக்குகின்றன

இந்த தேசத்தில் அதிகார வேட்டையினால் அரசியல் சீர்குலைவு ஏற்பட்டுள்ளதோடு ஜனநாயகத்துக்கே ஆபத்து ஏற்பட்டிருக்கிறது. அதிகாரமோகத்தில் ஏற்பட்டுள்ள அசங்கியத்தினால் தேசத்தின் நற்பண்புகளும் ஒழுக்க நெறிகளும் கூடச்சரிந்து விட்டன. அரசியலில் தற்போது ஏற்பட்டுள்ள போக்குகள்தேசத்தை இன்று எதிர்நோக்கும் சவால்களைச் சந்திக்கும் ஆற்றலைக்கூட இழந்துவிட்டன.

இந்த குறைபாடுகளுக்கெல்லாம் சிறந்த பரிகாரம் மக்களின் சக்தியை வளர்ப்பது தான். ஐக்கியம், சகோதரத்துவம், கூட்டுறவு, கூடிஇயங்குதல்ஆகிய எண்ணங்களை மக்களிடையே உண்டாக்குவதன் மூலமாகத்தான் இதைச்சாதிக்கமுடியும். மக்கள் தங்களுடையசொந்தபலத்தினாலும், கூடிச்செயலாற்றுவதனாலும் தங்கள்பிரச்னைகளைத் தீர்த்துக் கொள்ளக் கற்றுக்கொள்ளவேண்டும், தேசத்தில் அரசியல் போக்குகளையும் அவற்றின் காரணமாக ஏற்படும் பிரச்னைகளையும் மக்களே தங்கள் இயக்கங்களால் கட்டுப்படுத்தவேண்டும். இதை சாதிக்க சுயநலமற்ற இப்பணிக்கே தம்மை அர்ப்பணித்த தொண்டர்களின்படையொன்றை உருவாக்குவது அவசியம்.

நல்லவர்களுக்கு இந்தநாட்டில் குறைவே இல்லையென்பதே எங்கள் கருத்து. ஆனால் எதனாலோ அவர்களெல்லாம் ஒதுங் கியிருக்கிறார்கள். இவர் களெல்லாம் முன்னுக்கு வந்து சுயநலமில்லாது தங்களை அர்ப்பணித்துக்கொண்டு மக்களுக்கு தொண்டு செய்யவும் மக்கள் சக்தியைத் திரட்டவும் வேண்டிய சந்தர்ப்பம் வந்து விட்டது.

ஒப்பம்: கபார்கான்
வினோபா
ஜெயப்பிரகாஷ்நாராயண்

## அறிவிப்பு

காந்தி புகைப்பட, சர்வோதய இலக்கிய கண்காட்சியை நடத்த விரும்பும் அன்பர்களும், பொது நிறுவனங்களும் கீழ்க்காணும் முகவரியுடன் தொடர்பு கொள்ளுமாறு வேண்டப்படுகின்றனர்.

கௌரவ நிர்வாகி,
சர்வோதய நிகேதனம்,
இந்துக்கல்லூரிச்சதுக்கம்,
இரத்மலானை.

# செய்திகள்

சர்வோதய பாத்திரங்கள் மூலம் நவம்பர் மாதத்தில் 94 வீடுகளிலிருந்து 169 கொத்து அரிசியும் 10 ரூபா 09 சதமும் பெறப்பட்டது.

★ ★ ★ ★ ★

காந்தி சேவா சங்க நிர்மாணத் திட்டங்களில் பயிற்சிபெற இலங்கைக் கிராமப் புனருத்தாரண இயக்கம் ஊழியரை அனுப்ப விருப்பம் தெரிவித்துள்ளது.

★ ★ ★ ★ ★

பம்பலப்பிட்டி— கனிஷ்ட இந்துக்கல்லூரி சர்வோதய பாத்திர இயக்கம் மூலம் 27 கொத்து அரிசியும் 2ரூபா 51சதமும் கிடைத்துள்ளது.

★ ★ ★ ★ ★ ★

மொறட்டுவ-தெலவல ராகுல மகாவித்தியாலயத்தில் 22. 1. 70 இல் நடைபெற்ற சிரமதான முகாமில் காந்திசேவா சங்க ஊழியர் பங்கு பற்றினார்கள்.

## சர்வோதயப் பாத்திர அன்பர்கள்

சர்வோதய பாத்திரங்களில் நாள் தோறும் பிடிஅரிசியும் காசும்இட்டு இதனை மாதந்தோறும்சர்வோதய இயக்கத்திற்கு அளிக்கும் அன்பர்களின் பெயர்களைக் கடந்தஇதழ்களில் வெளியிட்டிருந்தோம். மேலும் பல அன்பர்களின் பெயர்களை வெளியிடுவதில் மகிழ்ச்சி அடைகிறோம்.

விவேகானந்த வீதி, வெள்ளவத்தை.

திரு. எஸ். இராசையா
திரு. எம். கார்த்திகேசு
திரு. சி. ஜயபாலன்
திரு. எஸ். செல்வராஜா
திரு. கே. நடராஜா
திரு. டி. பாலசிங்கம்
திரு. பி கந்தசாமி
திரு. எஸ் சுந்தரம்பிள்ளை
திரு. கே. பாலசுப்பிரமணியம்
திரு. கே. பேரம்பலம்
திரு. எஸ், ஆறுமுகரத்தினம்
திரு. எ. ஜெ. பென்டிக்

இப்பத்திரிகை அகில இலங்கைக் காந்தி சேவா சங்கத்திற்காக உருத்திரபுரம் சி. க. வேலாயுதபிள்ளை அவர்களால் ரத்மலானை காந்தி சேவா சங்க சர்வோதய அச்சக உபகரணங்களின் உதவியுடன் கொழும்புமெய்கண்டான் அச்சக லிமிட்டெட்டில் அச்சிடப் பட்டது.